**மண்முனை தென் மேற்கு பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

----------------------------------------------------------

1 நிதிக்கூற்றுக்கள்

--------------------

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

--------------------------------------

2015 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தெம்பர் 01 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-------------------------------------

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து மண்முனை தென் மேற்கு பிரதேச சபையின் 2015 மே 31 உள்ளவாறான நிதி நிலைமையினையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடு

----------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபைக்குச் சொந்தமாக பதின்மூன்று வாகனங்களும் மற்றும் பதினொரு இயந்திரங்களும் காணப்பட்ட போதிலும் அவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வங்கிக்கு நேரடியாக வைப்புச் செய்யப்பட்ட மீளாய்வாண்டிற்கான ரூபா 84,500 தொகையான நிலையான வைப்பு வட்டி மற்றும் ரூபா 206,500 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் Motor Grader மற்றும் JCB இயந்திரம் என்பவற்றை வாடகைக்கு வழங்கி பெறப்பட்ட ரூபா 40,000 தொகையை வருமானமாகக் கணக்கிடுவதற்கு பதிலாக வைப்பு கணக்கில் கணக்கிடப்பட்டுள்ளது.

1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

--------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பேரேட்டின் படி 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான ஊழியர் கடன் கணக்கு மீதி ரூபா 2,802,793 ஆகக் காணப்பட்ட போதிலும் பதவியினர் கடன் பதிவேடுகளின் படி அத்திகதியில் உள்ளவாறான மீதி ரூபா 2,959,300 ஆகக் காணப்பட்டதால் ரூபா 156,507 தொகையான வித்தியாசம் காணப்பட்டது.

(ஆ) பேரேட்டின் படி 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான முற்பண மீதி ரூபா 1,461,405 ஆகக் காணப்பட்ட போதிலும் தனித்தனி முற்பணக் கணக்குகளின்

கூட்டுமொத்த மீதி ரூபா 26,058 ஆகக் காணப்பட்டதா ரூபா 1,435,347 தொகையான வித்தியாசம் காணப்பட்டது.

1.3.3 ஆவணச்சான்றுகள் இன்மை

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி (ரூபா) | சான்றுகளின்மை |
|---|---|---|
| காணிகளும் கட்டிடங்களும் | 840,349,208 | காணி கட்டிடப் பதிவேடு |
| பொறி இயந்திரம் | 2,256,663 | நிலையான சொத்து பதிவேடுகள் |
| மோட்டார் வாகனங்களும் வண்டிகளும் | 11,750,000 | நிலையான சொத்து பதிவேடுகள் |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 5,143,072 | நிலையான சொத்து பதிவேடுகள் |
| களஞ்சிய இருப்பு | 102,009 | களஞ்சியப் பதிவேடு |

1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் | |
| (i) அத்தியாயம் I இன் விதி 5(12) | பணம், களஞ்சியப் பொருட்கள் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பிணைப் பணம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் X இன் விதி 193 | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

2 நிதி மீளாய்வு
-----------------

2.1 நிதி விளைவுகள்
---------------------

சமர்பிக்கப்பட்ட நிதிசார்கூற்றுகளின்படி 2015 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 5,685,067 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 8,426,849 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 2,741,782 பின்னடைவைக் காட்டுகின்றது.

3 செயற்பாட்டு மீளாய்வு
---------------------------

3.1 முகாமைத்துவ பலவீனம்
-------------------------------

சேவையை விட்டு விலகிய மற்றும் மரணமடைந்த இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய கடன் மீதி ரூபா 189,947 நான்கு ஆண்டுகளாக நிலுவையாக காணப்பட்ட போதிலும் அவற்றினை அவர்களின் பிணையாளர்களிடமிருந்து அல்லது அவர்களின் ஓய்வூதிய பணிக் கொடையிலிருந்து அறவிடுவதற்கு 2016 ஏப்ரல் 29 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 மனிதவள முகாமைத்துவம்
----------------------------------

சபையில் 14 வாகனங்கள் பயன்பாட்டில் உள்ள போதிலும் 03 சாரதிகளே சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

4 முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்
--------------------------------------------------

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான முகாமைத்துவம்